1979 மார்ச் 30]

பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லாப் பகுதிகளிலும் தரப்பட வேண்டுமென்ற ஒரு பிரச்சினையை இந்த நாட்டிலே முதன்முதலாக உருவாக்கி வைத்தார்கள். இன்றைக்கு அந்த எண்ணத்திலேதான் இந்த அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுபற்றி விரிவாக கேள்வியை மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சரவர்களிடத்திலே கேட்டார்களானால் விரிவான பதில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. மற்றக் கேள்விகள் நாளைக்குத் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெறாதது என்பதைக் குறிக்கும்.]

(2) உரிமைப் பிரச்சினைகள்.

(அ) கிராமத் தொழில்கள் அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேரவையின் 184-வது விதியின் கீழ், உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். இது சம்பந்தமாக நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். (குறுக்கீடு.) இது வேறா, சரி.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையில் மதுவிலக்குச் சட்டத்தை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மதுவிலக்குத் திருத்தச் சட்டத்தின் மீது நடந்த விவாதத்தில் நானும், இந்த அவையிலே உள்ள வேறு ஒரு சில முஸ்லீம் உறுப்பினர்களும் கலந்து கொண்டோம். நான் பேசும்பொழுது, மதுவிலக்குச் சட்டத்தை, ஒரு ஜீவாதாரமான கொள்கையை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் நாம், மதுவிலக்குச் சட்டம் நாட்டுக்குத் தேவையான ஒரு சீர்திருத்தச் சட்டமாக மட்டுமல்லாமல், அதை நாங்கள் முஸ்லீம்கள் என்ற

முறையில் ஏற்றுக் கொண்டிருக்கிற நம்பிக்கையின் அடிப்படைப் பகுதியாக ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் என்று மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றி மிகத் தீவிரமாக, எப்பொழுதும போல் எங்கள் கொள்கைக்கு ஒப்பப் பேசியிருக்கிறோம். ஆனால் அதற்கு மாறாக, இந்தச் சபையிலே நடக்காத, இந்தச் சபையிலே பேசப் படாத ஒரு கருத்தை கடந்த 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 22-ம் நாளைய 'அண்ணா' நாளிதழில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது அவர்கள் உத்திரமேரூர் என்ற ஊரில் பேசியபொழுது வெளியிட்டிருக் கிறார்கள். மதுவிலக்குச் சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், ஒரு முஸ்லீம் உறுப்பினர், குடிக் கட்டுமே, நாட்டு மக்கள் குடிக்கட்டுமே என்ற கருத்தில், அவர்கள் குடிப்பதற்கு ஆக்கம் அளிக்கும் வகையில் பேசியிருக் கிறார்கள் என்று அமைச்சரவர்கள் பேசியிருக்கிறார்கள். இது ஒரு தவறான கருத்தை நாட்டு மக்களிடத்திலே ஏற்படுத்தி யிருக்கிறது. அவர், எந்த உறுப்பினர் என்று குறிப்பிடாவிட் டாலும்கூட, மன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் ஒரு உறுப்பினர் என்று பேசியிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால், இந்த அவையில் எந்த உறுப்பினரும்—முஸ்லீம் உறுப்பினர் என்ற முறையில் அந்த விவாதத்தில் கலந்து கொண்ட எந்த முஸ்லீம் உறுப்பினரும் மதுவிலக்கு வேண்டாமென்று யாரும் பேசவில்லை.

அது மட்டுமல்லாமல், மதுவை மக்கள் சாப்பிடட்டுமே என்ற தோரணையிலும் யாரும் பேசவில்லை. அதற்கு மாறாக, நாட்டிலே மதுவிலக்குச் சட்டம் தீவிரமாக அமல் படுத்தப்படவேண்டும், மது என்ற அந்த அரக்கன் நாட்டிலே யிருந்து ஒழிக்கப்படவேண்டும். மதுவிலக்கு சட்டத்தைத் தீவிர மாகச் செயல்படுத்துவதற்கு இந்தச் சட்டத்திலே இருக்கிற சில ஊணங்களை இங்கேயே நாம் களைந்து விடுவோமானால், நாளைக்கு மதுவை ஆதரிப்பவர்கள் அதை ஒரு காரணமாக வைத்து கோர்ட்டு களுக்குச் சென்று அந்தச் சட்டத்தையே சிறிது காலத்திற்குத் தள்ளிவைக்கும் காரியத்தில் ஈடுபட முடியாது என்ற வகையில் சில கருத்துக்கள் சொல்லப்பட்டதே தவிர, அந்த வகையில் தீவிரமாக மதுவிலக்குச் சட்டம் அமல் படுத்தப்பட வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டதே தவிர, இங்கே பேசப்படாத ஒன்றை, ஏதோ உள்நோக்கம் வைத்து, அரசியல் காரணங்களுக்காக என்று கருதுகிறேன், சபையில் பேசப்படாத ஒன்றை, அமைச்சர் என்ற தகுதியையும் மறந்து, உண்மைக்கு மாறாக, வெளியிலே பேசியிருக்கிறார்கள். அது 'அண்ணா' நாளிதழில் வந்திருக்கிறது. இது தவறான கருத்தை நாட்டு மக்கள் மத்தியிலே ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான பேச்சை அமைச்சரவர்கள் அடிக்கடி பேசி வருகிறார்கள். இதனால், அவையிலே

1979 மார்ச் 30] [திரு. எம். ஏ. லத்தீப்]

நாங்கள் எல்லாம் பேசுவதற்குத் தயங்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அவையிலே பேசாத ஒன்றை, வெளி யிலே பேசியிருப்பதால் அமைச்சர் அவர்கள் அவை உரிமையை மீறியிருக்கிறார்கள்.

அதோடு, யார் என்றும் குறிப்பிடாமல், ஒரு முஸ்லீம் உறுப்பினர் என்று குறிப்பிட்டு, ஆளுங்கட்சி முஸ்லீம் உறுப்பினர்கள் உட்பட அவர் பேசியிருக்கிறார். ஆகவே, யார் என்று தெரியாது என்று வெளியே பேச்சு அடிபட்டாலும், அது யாரைக் குறித்து என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அரசியல் காரணங்களுக்காக, அவையில் பேசாத ஒன்றைப் பேசியதாகக் கூறுவது, அவை உரிமையை மீறிய தாகும். அது கண்டிக்கத்தக்கதாகும். ஆகவே, இது அவை உரிமையை மீறியது என்பதால், இதை அவை உரிமைக் குழுவுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு தலைவரவர்களே, உத்திரமேரூர் தொகுதியில் 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ம் நாளில் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அங்கே நான் பல்வேறு பொதுக் கூட்டங்களிலே பேசிய பேச்சுக்களை 'அண்ணா' நாளிதழில் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். நானும் அதைப் பார்த் தேன். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கூறுவதைப் போல், சட்டப் பேரவையிலே உறுப்பினர்கள் இப்படியெல் லாம் பேசினார்கள் என்ற தொனியிலே கருத்துக்கள் சொல்லப் படவும் இல்லை. அப்படி செய்தியாகவும் வரவில்லை. பொதுவாக சட்டத்தை எதிர்ப்பதன் மூலமாக, சில ஷரத்துக் களை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு, மது அருந்து கிறவர்களுக்கு உற்சாகத்தை அளித்து விடக்கூடிய முறையில் நம்முடைய பணி அமைந்துவிடக் கூடாது. மதுவிலக்குச் சட்டத் திலே குறைபாடுகள் இருந்தாலும் கூட காலப்போக்கிலே நாம் திருத்திக்கொள்ளலாம். ஆனால், உண்மையிலே மது அரக்கனை ஒழிக்கவேண்டுமென்று சொன்னால் விமர்சனங் களைப் பெரிதுபடுத்திக்கொண்டு போகக்கூடாது. அந்த அடிப் படையில் மது அருந்துபவர்களுக்கு ஆதரவு தருகிற வகையில் சிலபேர் பேசி வருகிறார்கள். அரசியல் காரணமாக, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, இந்தச் சட்டத்தை எதிர்ப் பவர்கள் மது அருந்துபவர்களை உற்சாகப்படுத்திவிடக்கூடாது. ஆனால், அவ்வகையில் சில உறுப்பினர்கள் பேசிவருவதாக நான் வெளியிலே கருத்து தெரிவித்திருக்கிறேன். சட்டப் பேரவை என்றும் குறிப்பிடவில்லை, சட்டமன்றம் என்றும் குறிப்பிடவில்லை. Member of a particular community என்றுகூட எடுத்துக் கொள்ளலாம். எனவே, அவர்களாக வலிந்து நான் ஏதோ உள்நோக்கத்தோடு சொன்னேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்த நோக்கம் எனக்கும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, நானும் இங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட குறைபாடுகளின் காரணமாக, இந்தச் சட்டத்தையே எதிர்த்து, வழக்குமன்றத்திற்குச் சென்று, இந்தச் சட்டமே செயல் படாத முறையில், அவர்கள் ஈடுபடுவார்கள் என்று கருத்து தெரிவித்ததை நானும் அறிவேன். எனவே, அவை மீறிய செயலாக இதைக் கருதத் தேவையில்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தைக் கேட்ட பிறகு இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மீது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் பேரவையின் 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது; திரு. சுப்பு அவர்களைச் சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—10]

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் கொடுத்த தீர்மானத்தைப் படித்து விடுகிறேன். அதற்குப்பிறகு இரண்டொரு நிமிடங்களில் நான் பேசி முடித்து விடுகிறேன்.

Under Rule 184 of the Assembly Rules, I am giving notice to raise the following matter of privilege against the Inspector-General of Police, Mr. E. L. Stracey, on the floor of the House, viz :—

"The Inspector-General of Police, Mr. E. L. Stracey, has met the Press at Trichy on 28th March 1979 and made certain important announcements about the major changes in this Police Department. The Report of the Press Conference has been given wide coverage in the dailies like the " Indian Express " " Malai Murasu " etc. The statement of the I.G. contains the following announcements among other things".

1. The State Police will be headed by a Director-General who will be a senior I.P.S. Officer.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.: படித்துவிட்டால் போதும். பிறகு பேசவேண்டாம் என்று நினைக்கிறேன்.